நாள் : 13.12.2023

**அசல் வழக்கு எண்: 162 /2019**

வா.சா.-1 மணிமேகலை முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

நான் மாரிமுத்து என்பவருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையில் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வயலுக்கு வரவேண்டிய பாசன வசதியை தடை செய்ததால் தாக்கல் செய்துள்ளேன் . தாவா சொத்து எனக்கு சொந்தமானது ஆகும். தாவா சொத்து எனது மகன் பெயரில் வாங்கப்பட்டது . அவர இறந்து விட்டார். சொத்தை வாங்கும்போது அவரது பாதுகாவலர் என்று என்னை தான் சேர்த்து இருந்தார்கள். தாவா சொத்தை எந்த தேதியில் வாங்கினோம் என்றால் தேதி குறிப்பிட்டு தெரியவில்லை . 35 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கினோம் . தாவா சொத்தை யாரிடமிருந்து வாங்கினோம் என்றால் தற்போது ஞாபகம் இல்லை . தாவா சொத்தை எனது மகன் சுரேஷ் என்பவர் பெயரில் வாங்கப்பட்டது . எனது மகன் திருமணம் ஆவதற்கு முன்னதாகவே இறந்துவிட்டார் . எனது மகனுக்கு 3 வயதாக இருக்கும்போது தாவா சொத்தை வாங்கினோம் . தாவா சொத்தை வாங்கியதற்கு பிறகு எனது மகன் பெயரில் பட்டா மாற்றம் செய்தோமா என்றால் எனது மகன் பெயரில் தான் உள்ளது . தாவா சொத்தை எனது மகன் பெயரில் வாங்கியதற்கு பிறகு பட்டா மாற்றம் செய்யவேண்டும் என்ற விபரம் தெரியவில்லை. தற்போது தேதி வரை தாவா சொத்தை வாங்கியதற்கு பிறகு எனது மகன் பெயரில் பட்டா மாற்றம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

தாவா சொத்தை நான் அனுபவம் செய்யாததாலும் , எனது மகன் மைனராக இருந்தபோதும் அனுபவம் செய்யாததால் தான் எனது மகன் பெயரிலும் , பாதுகாவலர் என்ற முறையில் எனது பெயரிலும் பட்டா மாற்றம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல . தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் ஆனால் ஞாபகம் இல்லை . எத்தனை சர்வே எண் உள்ள சொத்துக்களுக்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரே சர்வே எண் உள்ள சொத்துக்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் . தாவா சொத்திற்குண்டான நான்கெல்லை விபரம் தெரியுமா என்றால் ரோட்டுக்கு தெற்கு, அண்ணாமலை வயலுக்கு மேற்கு , ஏஎம்எஸ் நிலத்திற்கு கிழக்கு ,

நாராயணசாமி வீட்டிற்கு வடக்கில் அமைந்துள்ளது. தாவா சொததின் விஸ்தீர்ணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் ஆகும். தாவா சொத்தை நான் அனுபவம் செய்தது கிடையாது என்பதால் தான் தாவா சொத்தின் சர்வே எண் விஸ்தீர்ணம் , நான்கெல்லை குறித்து என்னால் சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது விவசாய சாகுபடி நிலம் இல்லை என்றாலும் , பண்ணை குட்டையாக தான் உள்ளது என்றால் சரியல்ல .தற்போது வரை சாகுபடிதான் செய்து வருகிறோம். அதில் சிறிய அளவில் குட்டை வைத்துள்ளோம். தாவா சொத்தில் நான் சாகுபடி செய்து வந்திருந்தால் வருவாய் ஆவணங்களான அடங்கல் எனது பெயரில் வழங்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான் . வழக்குரையுடன் தாவா சொத்திற்குண்டான அடங்கலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல விவசாய நிலம் கிடையாது என்றாலும் என்னால் தாக்கல் சயெ்துள்ள வழக்குரையில் குட்டை என்றுதான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

*கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது தரப்பு வாதியிடம் சங்கதிகளைப் பெற்று பின்னர் குறுக்கு விசாரணை யை தொடர அனுமதி கேட்கிறார் . நீதிநலன் கருதி குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.*

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d. A.Seethalakshimi,
District Munsif
Mannargudi.(FAC)